வாக்குமூலம்

**திருவையாறு நீதித்துறை நடுவர் நீதிமன்றம்**

வழக்கு எண். STC. 358/2022

வழக்கு சாட்சி- **அ.சா.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | வாசு | : | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கலியபெருமாள் | : | தொழில் | விவசாயம் |
| கிராமம் | வீரப்புடையான்பட்டி | : | சமயம் | |
| தாலுக்கா | பூதலூர் | : | வயது | 53/2024 |

(எதிரி ஆஜர்)

**நாள் : 21.03.2024**

**முதல் விசாரணை** :

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகின்றேன். பட்டியல் சாட்சி 1 எனது மனைவி ஆவார். அவர் தற்போது இறந்து விட்டார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. கடந்த 27.10.2021ம் தேதியன்று இரவு 7.00 மணியளவில் அய்யானபுரத்தில் உள்ள நெல் போடும் சென்டரில் இருந்து சைக்கிளில் நானும், எனது மைத்துனரும் வந்து கொண்டு இருந்தபோது இருசக்கர வாகனத்தில் வந்த ஒருவர் எங்கள் மீது மோதி தள்ளிவிட்டார். அந்த விபத்தில் இடபுற நெற்றி புருவத்திலும், வலது கையிலும் அடிபட்டது. உடனே என் மைத்துனர் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் பூதலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். அங்கு முதல் உதவி பெற்ற பின்பு மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் TMCH க்கு சென்றோம். என் மனைவி புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.**